DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai
**CC. No. 345/2025**

**eposition of LW2 examined as PW2** Dt. 10.03.2026

| | |
|---|---|
| Name | வினித் |
| Father's Name | அறிவழகன் |
| Village | நல்லாவூர் |
| Taluk | |
| Age | 18/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 10.03.2026

(A1, A2 present)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து டிம்பளமோ 2-ம் வருடம் படித்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில் இல்லை. கடந்த வருடம் ஒரு நாள் இரவு நானும் எனது அப்பாவும் வீட்டில் இருந்த போது யாரோ சிலர் என் வீட்டிற்கு வந்து எங்களிடம் தகராறு செய்து திட்டி, தாக்கினார்கள். எங்களுக்கு ஏற்பட்ட காயத்திற்கு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது போலீசாரிடம் ஆஜர் எதிரிகளுக்கும் எங்களுக்கும் ஏற்கனவே இருந்த முன்விரோதம் காரணமாக ஆஜர் எதிரிகள்தான் மேற்படி குற்ற செயலை செய்திருப்பார்கள் என்று மிகைப்படுத்தி அ.சா.1 எனது அப்பா புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டார். இரவு நேரம் என்பதால் எங்களை திட்டி தாக்கியவர்கள் யார் என்று எனக்கு தெரியவில்லை சம்பவ இடத்தில் எதிரிகளை நான் பார்க்கவில்லை. பின்னிட்டு போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

**அரசுதரப்பு குறுக்குவிசாரணை**

ஆஜர் எதிரிகள் எனது பக்கத்து வீட்டை சேர்ந்தவர்கள் ஆவார். ஆஜர் எதிரிகளோடு தற்போது சமதானம் ஆகி சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். கடந்த 08.09.2025 ம் தேதி இரவு 10.00 மணியளவில் நாங்கள் வீட்டில் இருந்த போது ஆஜர் எதிரிகள் எங்கள் வீட்டிற்கு வந்து அ.சா.1 எனது அப்பாவை தகாத வார்த்தைகளில் திட்டியும், எதிரி ராஜா கையில் மறைத்து வைத்திருந்த அறிவாளால் எனது அப்பாவின்

A. Vinith

தலை மற்றும் கையில் வெட்டி ரத்த காயத்தை ஏற்படுத்தியதாகவும், தடுக்க வந்த என்னையும் அறிவாளால் வெட்டி ரத்த காயத்தை ஏற்படுத்தியதாகவும், எங்களை கொன்று விடுவதாக கொலை மிரட்டல் விடுத்ததாகவும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டபடியால் அவர்களை வழக்கில் இருந்து விடுவிக்க வேண்டும் என்பதற்காக போலீசார் விசாரணைக்கு மாறுபட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

H. Ruth